**தலைப்பு 215 – தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 215 – தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 மார்ச் 07 ஆம் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல் என்பனவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

---

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

---

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

---

திணைக்களத்திற்காக வழங்கப்பட்ட மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 2,349.12 மில்லியனாக இருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் அதில் ரூபா 2,132.30 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்தத் தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 216.82 மில்லியன் அதாவது 9.23 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காணப்படுகின்றது.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டுவருபவை | 1,999.12 | 1,941.63 | 57.49 | 2.88 |
| மூலதனம் | 350.00 | 190.67 | 159.33 | 45.52 |
| மொத்தம் | **2,349.12** | **2,132.30** | **216.82** | **9.23** |

**.2. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 21501 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடி யானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடி யானது |
| ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 55.00 | 42.93 | 50.00 | 52.56 | 200.00 | 101.42 |

**2.3 பொது வைப்புக் கணக்குகள்**

திணைக்களத்தின் கீழ் பின்வரும் 03 பொது வைப்புக் கணக்குகளில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 34.00 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா. மில்லியன் |
| 6000/0000/00/0001/0081/000 | 0.60 |
| 6000/0000/00/0016/0058/000 | 24.50 |
| 6000/0000/00/0018/0070/000 | 8.90 |
| மொத்தம் | **34.00** |

## 2.4 கணக்காய்வு அவதானிப்பு

தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன் நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | கட்டணங்கள் பதிவேடு (பணப் பெறுவனவிற் கான பதிவேடு | நிதிப் பிரமாணம் 165(4) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டி ருக்கவில்லை. |

### 3.2 பாதீட்டு முரண்கள்

13 செலவு விடயங்கள் தொடர்பாக மிகைநிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தமையால் அச் செலவு விடயங்களுக்கு உரிய நிதியேற்பாட்டினை பயன்படுத்திய பின்னர் சேமிப்பு தேறிய நிதியேற்பாட்டில் 26 சதவீதம் முதல் 94 சதவீதம் வரையான வீச்சின் அளவை கொண்டிருந்தது.

### 3.3 பொது வைப்புக் கணக்கு

2 ஆண்டுகளை மிகைத்த ரூபா 2.52 மில்லியன் வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

விடய இலக்கம் 21501 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்றின் பிரகாரம் அத் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 101.42 மில்லியனாகக் காணப்பட்டது. அதில் இடமாற்றம், ஓய்வுபெற்ற மற்றும் மரணித்த, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட, சேவையை வரிதாகிச் சென்ற, உத்தியோகத்தர்களின்

கடன் மீதி ரூபா 4.12 மில்லியனாக இருந்ததுடன் அது 01 வருடம் முதல் 20 வருடங்கள் வரையான கால வீச்சில் இருந்து வந்தன. இது தொடர்பாக திணைக்களம் போதியளவில் செயற்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்

கீழே காட்டப்பட்டுள்ள சொத்துக்கள் விளைவற்ற வகையில் காணப்பட்டமை தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

(i) சுமார் 10 வருட காலமாக ஹோமாகம தொழில்நுட்பக் கல்லூரியில் மோட்டார் வாகனங்களை (vehicle hoist) உயர்த்தும் இயந்திரம்

(ii) கண்டி தொழிநுட்பக் கல்லூரிக்கு 2010 ஆம் ஆண்டின் போது செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த CNC Milling இயந்திரமும் CNC Lathe இயந்திரமும்

(iii) பதுளை தொழில்நுட்பக் கல்லூரியில் உள்ள CNC Lathe இயந்திரம்

(iv) உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் தம்புள்ள தொழில்நுட்பக் கல்லூரியில் மூடி வைக்கப்பட்டுள்ள வாயு மற்றும் நீராவி ஒட்டும், இயந்திர மர வேலைகள், மேசன்மார்கள் போன்ற தொழிற்சாலைகளில் உள்ள உபகரணங்கள்

#### 3.5.2 வருடாந்த பொருட்கள் மெய்மையாய்வினை நடாத்துதல்

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2.4 பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் பொருட்கள் மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த பற்றாக்குறைகள் மற்றும் மிகைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் 2017 ஏப்ரல் 15 ஆந் திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 04 தொழில்நுட்ப / தொழில்நுட்பவியல் கல்லூரிகள் அந்நடவடிக்கைகளை 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்திருக்கவில்லை.

#### 3.5.3 வெளித்தரப்பினருக்கு வழங்கியிருந்த சொத்துக்கள்

திணைக்களத்தினால் பின்வரும் சொத்துக்கள் வெளித்தரப்பினருக்கு முறைசாராத வகையில் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அச் சொத்துக்களை விடுவித்திருந்த திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | அளவு | சொத்து அமைந்திருக்கும் இடம் | சொத்துக்கள் வழங்கியிருந்த நிறுவனம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|---|
| (i) | 10 ஏக்கர் | குளியாப்பிடிய தொழிநுட்பக் கல்லூரி – வெவதன்ன காணி | பல்கலைக்கழக கல்லூரி | தேவையான அளவீட்டு நடவடிக்கைகள் மற்றும் திட்ட வரைபடம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 08 ஏக்கர் | - மேற்படி - | இளைஞர் படையணி | முறையான கையளிப்பு இடம் பெற்றிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | 110 பேர்ச் | பெலிஅத்த தொழிநுட்பக் கல்லூரியின் நீச்சல் தடாகம் | விளையாட்டு அமைச்சு | விளையட்டு அமைச்சின் உத்தியோகத்தரொருவரால் கையேற்கப்பட்டிருந்த போதிலும் முறையான கடிதமொன்று தொழில்நுட்ப கல்லூரிக்கு வழங்கியிருக்கவில்லை. |
| (iv) | 9.5 பேர்ச் | கேகாலை தொழிநுட்பக் கல்லூரி | தனிநபர் ஒருவருக்கு | 1997 ஆம் ஆண்டின் போது 30 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் குத்தகை ஒப்பந்தம் திணைக்களத்திடம் காணப்படவில்லை. |
| (v) | 6.8 பேர்ச் | - மேற்படி - | | வெளிநபரொருவர் அத்துமீறி குடியிருப்பதுடன் அது தொடர்பாக 2015 திசெம்பர் 04 ஆந் திகதி கேகாலை தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் எதிர்ப்பு தெரிவித்திருந்த போதிலும் திணைக்களத்தினால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | 05 ஏக்கர் | - மேற்படி - | இளைஞர் படையணி பயிற்சி நிலையம் | முறையான கையளிப்பு இடம் பெற்றிருக்கவில்லை. |
| (vii) | 1.5 ஏக்கர் | - மேற்படி - | திறந்த பல்கலைக்கழகம் | சட்டரீதியாக கையளிக்கப்பட்டி ருக்கவில்லை. |
| (viii) | 3 ரூட் 3.9 பேர்ச் | இரத்மலான தொழில்நுட்பக் கல்லூரி | பல்கலைக்கழக கல்லூரி | முறையான கையளிப்பு இடம் பெற்றிருக்கவில்லை. |

**3.5.4 வாகனக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின் இறுதியில் 70 வாகனங்களின் கூடிய வாகனத்தொகுதி மீதான பரிசோதனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெலிஅத்த தொழில்நுட்பக் கல்லூரிக்கு இணைக்கப்பட்டிருந்த வாகனம் ஒன்று 2011 மார்ச் 18 ஆந் திகதி அதனது என்ஜின் செயற்படாமல் போனமை மற்றும் 2011 ஜூன் 05 ஆம் திகதி அக்கல்லூரி வளவில் வாகனம் நிறுத்தப்பட்டிருந்த போது பின்பக்க கண்ணாடி உடைந்தமை ஆகிய சம்பவங்களின் காரணமாக வாகனத்தை உரிய நிலைக்கு கொண்டு வருவதற்காக ரூபா 1.97 மில்லியன் தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. நிதிப் பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 2014 ஜூன் 25 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் நட்டத்தின் 40 சதவீதத்தை சாரதியிடம் அறவீடு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் அத்தொகை 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியின் மோட்டார் கோச் வகையான வாகனம் ஒன்றினை 2012 செப்தெம்பர் 27 ஆந் திகதி பணிப்பாளரினால் ஓட்டிச்சென்ற சந்தர்ப்பத்தின் போது விபத்துக்கு உட்பட்டிருந்ததுடன், அவ்வகையான வாகனம் (மோட்டார் கோச்) ஓட்டுவதற்கான சாரதி அனுமதிப்பத்திரம் ஒன்று அவரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாகனத்தை திருத்தியமைப்பதற்காக ரூபா 1.00 மில்லியன் அளவிலான தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 2013 ஜனவரி 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையின் பிரகாரம் வாகனத்திற்கு சாரதியொன்றை நியமிக்காமை மற்றும் முழுப்பொறுப்புடனான காப்புறுதி செய்யப்படாததன் காரணமாக நட்டத்தின் 50 சதவீதம் வாகனத்தை ஓட்டிச் சென்ற பணிப்பாளரிடம் அறவீடு செய்யப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அப் பணிப்பாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1.03 மில்லியனில் 50 சதவீத அளவினை 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 திசெம்பர் 26 ஆந் திகதி ரூபா 462,450 தொகை செலவிடப்பட்டு திருத்தம் செய்யப்பட்ட வாகனம் ஒன்றின் என்ஜின் 03 மாதங்களின் பின்னர் செயற்படாது காணப்பட்டது. 2017 ஒக்தோபர் 31 ஆந் திகதி வரையிலும் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் விளைவற்றுக் காணப்பட்ட போதிலும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுத்திருக்கவில்லை.

(ஈ) கொரிய மானியத்தின் கீழ் 2014ஆம் ஆண்டின் ரோது திணைககளத்திற்கு வழங்கப்பட்டிருந்த ஜீப் வண்டியை திணைக்கள நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாமல் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது.

### 3.5.5 அரசாங்க வீடுகளின் கட்டுப்பாடு

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 260 அரசாங்க வீடுகள் திணைக்களத்திற்குச் சொந்தமாக காணப்பட்டன. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) தாபனவிதிக் கோவையின் அத்தியாயம் XIX 7.2 பிரிவின் பிரகாரம் குத்தகைக் காலத்தை மிகைத்து குடியிருக்கும் காலப்பகுதிக்காக காத்திருத்தல் பட்டியலில் விண்ணப்பதாரிகள் இருக்கும் சந்தர்ப்பங்களில தண்டப் பணம் ஒன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் அநுராதபுரம், நுவரெலியா தம்புள்ள, கண்டி, தெஹிஅத்தகண்டிய மற்றும் காலி ஆகிய கல்லூரிகளுக்குரிய அரசாங்க வீடுகளில் 12 உத்தியோகத்தர்கள் தெடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

மேற்படி உத்தியோகத்தர்களுக்கு இடையே தம்புள்ள மற்றும் கண்டி தொழில்நுட்ப கல்லூரிகளில் 10 வருடங்கள் கடந்த 04 உத்தியோகத்தர்களாக இருந்ததுடன், காத்திருக்கும் பட்டியலில் விண்ணப்பதாரிகள் இருக்கும் சந்தர்ப்பத்தில் தண்ட வாடகை செலுத்திக் கொண்டு 10 வருடங்களுக்கு மேற்பட்ட 02 உத்தியோகத்தர்கள் இரத்மலான மற்றும் ஹோமாகம தொழில்நுட்ப கல்லூரிகளில் குடியிருந்து வந்தமை அவதானிக்கப்பட்டன.

(ஆ) திணைக்களத்திற்கு சொந்தமான வீடுகளின் எண்ணிக்கை, அமைந்துள்ள இடம், வீடுகளின் வகை, வதியும் உத்தியோகத்தர்களின் விபரம் மற்றும் செலுத்தும் வாடகை பற்றிய விபரங்கள் அடங்கிய பதிவேடொன்று மற்றும் காத்திருத்தல் பட்டியலொன்று தலைமை அலுவலகத்தினால் பேணப்படாமையினால் உத்தியோகபூர்வ வீடுகளின் கட்டுப்பாட்டு பலவீன மட்டத்தில் காணப்பட்டது.

(இ) வீடுகள் தொடர்பான கோவைகள் பரிசோதனையின் போது உத்தியோகத்தர்களால் அவ்வப்போது வீடுகளுக்கு விண்ணப்பிப்பது அவதானிக்கப்பட்டதுடன், குத்தகை காலம் முடிவடையும் போதும், இடமாற்றத்தின் போதும், ஓய்வுபெறும் போதும் வீடுகள் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் கையளிக்காமை காரணமாக வீடுகளுக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகத்தர்கள் தொடர்பாக நியாயமான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) கணக்காய்விற்கு கிடைத்த தகவல்களின் பிரகாரம் திணைக்களத்திற்குச் சொந்தமான வீடுகளில் 110 உடைந்த நிலைமையில் காணப்பட்டதுடன் 08 வீடுகள் பயன்படுத்த முடியாத நிலைமையில் காணப்பட்டன. மேலும் அவ்வீடுகளை திருத்துவதற்காக திணைக்களம் முறையான நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

**3.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | |
| (i) XIV ஆம் அத்தியாயத்தின் 2.1 மற்றும் 2.2 பிரிவுகள் | பிரயாணச் செலவின விண்ணப்பங்களில் கடமைப் பிரயாணம் ஆரம்பிக்கும் இடத்தை தீர்மானிப்பதற்கு தேவையான நிரந்தர முகவரி குறிப்பிடப்படாதிருந்த 23 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ii) XIV ஆம் அத்தியாயத்தின் 4.1 பிரிவு | செலுத்த வேண்டிய இணைந்த படிகளைத் தீர்மானிப்பதற்காக உரிய பிரயாண தூர அளவு உறுதிச்சீட்டில் குறிப்பிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு குறிப்பிடப்படாத 23 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iii) XIV ஆம் அத்தியாயத்தின் 28.5 மற்றும் 28.6.1 பிரிவுகள் | ➢ தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரயாண செலவின உறுதிச் சீட்டிற்காக தீர்மானிக்கப்பட்ட தாமதக் கட்டணங்கள் அறவிடப்படாத 38 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.<br>➢ தாமதமாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிரயாண செலவின உறுதிச்சீட்டுக் களிலிருந்து தாமதக் கட்டணங்கள் சரியாக அறவிடப்படாத 13 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

| | |
|---|---|
| (iv) XIV ஆம் அத்தியாயத்தின் 28.6.1 பிரிவு | ➢ பிரயாண செலவின விண்ணப்பங்கள் 03 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்தால் திணைக்கள தலைவரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெறப்படாத 17 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

---

| | |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 138(6) | கொடுப்பனவு செய்யும் போது கொடுப்பனவிற்குரிய கோவையில் தொடர்பான தொடர்புக் குறிப்பு உறுதிச்சீட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாதிருந்த 12 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (ii) நிதிப்பிரமாணம் 115(1), (2), (3), (ஆ) | முன்னைய ஆண்டின் கொடுப்பனவு களுக்காக அதிகாரமுள்ள உத்தியோகத்தரிடமிருந்து சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத 04 சந்தர்ப்பங்களில் ரூபா 53,472 கூட்டுத்தொகையான கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| (iii) நிதிப் பிரமாணம் 237(ஆ) மற்றும் நிதிப் பிரமாணம் 751 | களஞ்சிய வழங்கலுக்காக கொடுப்பனவு செய்யும் போது பொருட்கள் பெற்றுக் கொண்டமைக்காக சான்றிதழொன்றும் பொருட் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் உறுதியுடன் சமர்ப்பிக்கப்படாத 23 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. |
| (iv) நிதிப் பிரமாணம் 245(i) மற்றும் நிதிப்பிரமாணம் 257 | அதிகாரம் பெற்ற உத்தியோகத்த ரொருவரால் சான்றுறுதிப்படுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்படா திருந்த 10 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. மேலும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் 03 கல்லூரிகளுக்குரிய 26 உறுதிச் சீட்டுகள் சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |

(v) நிதிப்பிரமாணம் 232(2)

கொடுப்பனவு உறுதிச்சீட்டில் செலுத்தப்பட்ட தொகை எழுத்தினால் குறிப்பிடப்படாத 14 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(vi) நிதிப் பிரமாணம் 225(4)

ஏதேனும் கொடுப்பனவு சரி பிழை பார்க்கும் உத்தியோகத்தரால் சரி பிழை பாரக்கப்பட்டதாக உறுதிச்சீட்டில் சிறு கையொப்பம் இடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாதிருந்த 08 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(vii) நிதிப் பிரமாணம் 206(i)

வைப்புக்களிலிருந்து மீள எடுத்தல் உறுதிச்சீட்டுக்கள் இரண்டு உத்தியோகத்தர்களால் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படாத 05 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) சட்டரீதியான ஏற்பாடுகள்

---------------------------------------

நகர சபைக் கட்டளைச் சட்டத்தன் 231(3) ஆம் பந்தி

- தலைமை அலுவலகத்திற்குரிய கட்டிடங்களுக்காக உரிய திகதியில் அல்லது அத்திகதிக்கு முன்னர் வீதவரி செலுத்தாமையால் ரூபா 898,157 ஆன கழிவு நலனைப் பெறுவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

- தொழிநுட்ப / தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் உரிய திகதிக்கு முன்னர் வீதவரி கொடுப்பனவு செய்யப்படாமையால் ரூபா 38,136 ஆன கழிவுப்பணம் அரசிற்கு கிடைக்காமல் போனது.

## 3.7 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

---------------------------------------------------------------------

**துறைசார் தொழிற்திறன் அபிவிருத்தி செயற்திட்டம்**

------------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தினால் வெளிநாட்டு நிதியளிப்பின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த துறைசார் தொழிற்திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் தொழிநுட்ப மற்றும் தொழிநுட்பவியல் கல்லூரிகளின் கட்டிடங்களை நவீன மயப்படுத்துதல், உபகரணங்கள் கொள்வனவு செய்தல் மற்றும் பயிற்சி வழங்களுக்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 462.68 மில்லியனான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது ரூபா 329.97 மில்லியன் அதாவது 71 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) கட்டிட புனரமைப்பும் நவீனமயப்படுத்தலும்**

(i) 2015 ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு உத்தேசித்திருந்த பண்டாரவெல, ஹோமாகம மற்றும் சம்மாந்துறை தொழிநுட்ப கல்லூரிகளின் கட்டிடங்களை நவீனமயப்படுத்துவதற்காகவும் மறுசீரமைப்பதற்காகவும் ரூபா 90.00 மில்லியன் நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும் திட்டமிடப்பட்டவாறு அவ்வேலைகள் பூர்த்தி செய்தல் தாமதித்ததன் காரணமாக ரூபா 46.86 மில்லியன் தொகை அதாவது ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 52 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே அச் செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 40.00 மில்லியன் நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன், அவற்றில் ரூபா 35.83 மில்லியன் தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி பொலன்னருவ, நுவரெலியா, வாரியபொல மற்றும் களுத்துறை ஆகிய 04 தொழில்நுட்ப கல்லூரிகள் மற்றும் 08 தொழில்நுட்பவியல் கல்லூரிகளின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக முறையே ரூபா 120 மில்லியன் மற்றும் ரூபா 155 மில்லியன் நிதியேற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் மொத்த நிதி ஏற்பாடுகளில் முறையே ரூபா 86.33 மில்லியன் மற்றும் ரூபா 84.78 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த மறுசீரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு திணைக்களம் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) மருதானை தொழில்நுட்ப கல்லூரியின் கட்டிட புனரமைப்பிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 19.375 ஆன மொத்த நிதிஏற்பாடும் பயன்படுத்தப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) உபகரணங்கள் கொள்வனவு செய்தல்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பொலன்னருவ, நுவரெலியா, வாரியபொல மற்றும் களுத்துறை ஆகிய தொழில்நுட்ப கல்லூரிகளுக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 80 மில்லியன் நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதன் மூலம் ரூபா 26.60 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்தம் அளிப்புச் செய்யப்பட்டிருந்த எந்தவொரு வழங்குனரும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த உபகரணங்களை வழங்கி பூர்த்தி செய்யாதிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் நிதி ஏற்பாடுகளில் ரூபா 53.40 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) நுவரெலியா தொழில்நுட்ப கல்லூரியின் இயந்திர (Mechanist) பாடநெறிக்காக ரூபா 19.89 மில்லியனுக்கு CNC Milling இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அந்த இயந்திரத்தை நிறுவுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த கட்டிடத்திற்கு தேவையான மின்வழங்கல் இயலளவினைப் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான அடிப்பாதத்தை தயாரிப்பதற்கு காலந் தாழ்த்தியதால் பாரியளவு பணம் செலவிடப்பட்டிருந்த இவ்வியந்திரம் 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

- மீளாய்வாண்டிற்குரிய நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யும் போது மேலே குறிப்பிடப்பட்ட இயந்திரமொன்றின் தேவைப்பாடு இனங் காணப்படாதிருந்ததுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரையின் பேரில்துறையில் நவீன தொழில்நுட்ப அறிவு மற்றும் திறமையை வழங்குவதற்காக இவ்வியந்திரம் கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

- இந்த இயந்திரம் உயர் தொழில்நுட்ப இயந்திரமொன்றாகவும் தற்போது நுவரெலியா தொழில்நுட்ப கல்லூரியில் இப்பாடநெறியை போதிப்பதற்காக நிரந்தர மதியுரையாளர் ஒருவர் இல்லையெனவும் திணைக்களத்தினால் தேவையான வளங்களை இனங்காண்பதற்கும் அதனை உரிய தொழில்நுட்ப / தொழில்நுட்பவியல் கல்லூரிகளுக்கு வழங்குவது தொடர்பாக சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வியந்திரம் மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டமை சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக அவதானிக்கப்பட்டது.

## 3.8 ஒப்பந்த நிர்வாகம்

திணைக்களத்தினதும் தொழில்நுட்ப / தொழில்நுட்பவியல் கல்லூரி கட்டிடங்களின் புனரமைப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் வேலைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) திணைக்களத்தின் அவசர கட்டிடங்களின் திருத்தம், வரகாபொல தொழிநுட்ப கல்லூரியின் கட்டிட திருத்த வேலைகள், புதிதாக கூரையைப் பொருத்துதல் மற்றும் தம்புள்ள தொழில்நுட்ப பீடத்தின் விவசாய ஆய்வுகூட நிர்மாணம் என்பவற்றிற்காக முறையே ரூபா 1,148,799, ரூபா 3,370,002, ரூபா 4,116,510 மற்றும் ரூபா 12,213,955 தொகைகள் பொறியியலாளர் மதிப்பீட்டுப் பெறுமதியாக இருந்தன. அந்நிர்மாணங்களுக்காக ஒப்பந்த நிறுவனமொன்று மாத்திரம் கூறுவிலை சமர்ப்பித்திருந்தது. அந்நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலையின் பெறுமதி பொறியியலாளர் மதிப்பீட்டை விடவும் கூடிய இருந்த போதிலும் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டின் பேரில் பொறியியலாளர் பெறுமதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இறுதிப் பட்டியல் தீர்ப்பனவு செய்யும் போது உடன்படிக்கை பெறுமதியை விட கருத்திற் கொள்ளக் கூடிய விலகல் அவதானிக்கப்பட்டதுடன் மேலதிக வேலைகளாக முறையே ரூபா 440,623 ரூபா 478,345 மற்றும் ரூபா 127,064 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. அதற்காக பணிப்பாளர் நாயகத்தின் முன்அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தனர்.

(ஆ) மன்னார் தொழில்நுட்ப கல்லூரியின் எல்லை வேலிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 14.00 மில்லியன் நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அச்செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அம்பாறை ஹாடி கல்லூரியின் தங்குமிட விடுதியினதும் விரிவுரை மண்டபங்களினதும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 100 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்நடவடிக்கைகள் மேற்கொள்வதன் தாமதம் காரணமாக ரூபா 66 மில்லியன் நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

### 3.9 செயலாற்றுகை

2016 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயலாற்றுகை மீதான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### 3.9.1 தொழிநுட்ப/ தொழிநுட்பவியல் கல்லூரிகளுக்கு மாணவர்களைச் சேர்த்தல் மற்றும் பாடநெறிகளை நடாத்துதல்

மீளாய்வாண்டின் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 39 தொழிநுட்பவியல்/ தொழிநுட்பக் கல்லூரிகளில் 69 பாடநெறிகளை நடாத்துவதற்காகவும் அதற்காக 25,340 மாணவர்களை அனுமதிப்பதற்கும் திட்டமிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2015 செப்தம்பர் 04 மற்றும் 2015 நவம்பர் 20 ஆந் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் சிங்களம், தமிழ், ஆங்கிலம், யப்பான் மற்றும் கொரியன் மொழிகள் மூலமான 93 பாடநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் 71 பாடநெறிகளுக்காக 26,591 மாணவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். இந்த ஆட்சேர்ப்பு முன்னைய ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 19,863 மாணவர் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது 6,728 மாணவர்களின் அதிகரிப்பு பெற்றுக்கொள்ளப்பபட்டிருந்தது. எவ்வாறாயினும் முன்னைய ஆண்டின் கொள்கை ரீதியான தீர்மானத்தின் பேரில் குறுங்கால ஆங்கில பாடநெறிகளை வரையறையுடன் நடத்துவதற்கும், மாணவர்களை முடிந்த அளவில் கைகளினாலும் செய்யும் கைத்தொழில்களுடன் தொடர்புடைய தொழிற் கல்வி மீது கவனம் செலுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டதால் முன்னைய ஆண்டின் மாணவர் அனுமதித்தல் போக்கில் குறைவொன்று இடம்பெற்றிருந்தது.

(ஆ) அனுமதிப்பதற்கு திட்டமிடப்பட்ட மாணவர்கள் அளவு உள்ளவாறான அளவுடன் ஒப்பீடு செய்த போது திணைக்களம் செயன்முன்னேற்றமொன்றை பெற்றுக்கொண்டிருந்த போதிலும், மொத்த பாடநெறிகளின் எண்ணிக்கையில் 11 பாடநெறிகளுக்குரிய மாணவர் அனுமதி இலக்கிடப்பட்ட எண்ணிக்கையில் 50 சதவீதத்தையும் விட குறைந்த அளவில் காணப்பட்டது.

(இ) மீளாய்வாண்டில் திணைக்களத்தின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு உட்படாத பொறியியலாளர் திட்ட கைப்பணி, ஆரம்ப மற்றும் தொழில்சார் ஆங்கில பாடநெறி, உயர் தொழில் நிபுணத்துவம் உட்பட 15 பாடநெறிகள் நடத்தப்பட்டன. அதற்காக 6942 மாணவர்கள் அனுமதிக்கப்பட்ட அதாவது தொழில்நுட்ப கல்லூரிகளுக்கான மொத்த மாணவர் எண்ணிக்கையில் 25 சதவீதமாக இருந்ததுடன், மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்கு இடையே கூடுதலாக சமூகமளித்திருந்த பாடநெறிகளும் அதில் காணப்பட்டன.

(ஈ) 1580 மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட 13 பாடநெறிகளுக்காக போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாமையால் எந்தவொரு தொழிநுட்பவியல்/ தொழிநுட்பக் கல்லூரிகளில் அப்பாடநெறி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்த பாடநெறிகளுக்கு இடையே 19 பாடநெறிகள் நடாத்தப்படாதிருந்ததுடன் அவ்வாறு வர்த்தமானியில் வெளியிடப்படாத 17 பாடநெறிகள் நடாத்தப்பட்டிருந்தன.

### 3.9.2 பாடநெறிகளின் தராதரம்

2013 பெப்ரவரி 26 ஆந் திகதி 01/2013 இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் தொழிற்தகைமை சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து பாடநெறிகளும் தராதரம் அளிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் கணக்காய்வுத் திகதியான 2017 யூன் 23 திகதியில் உள்ளவாறு 39 தொழிநுட்பவியல்/ தொழில்நுட்பக் கல்லூரிகளில் நடத்தப்படுகின்ற 771 பாடநெறிகளில் 82 பாடநெறிகள் தராதரப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக தராதரப்படுத்தப்படாத பாடநெறிகளைப் பின்பற்றிய மாணவர்கள் பாடநெறிகளை பூர்த்தி செய்து கல்லூரிகளிலிருந்து விலகிச் செல்கையில் தேசிய நிலையில் சான்றிதழ் ஒன்றினைப் பெறும் சந்தர்ப்பம் இழக்கப்படுகின்றதென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.9.3 மாணவர்கள் பாடநெறிகளை விட்டுச் செல்லல்

கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அனுமதிக்கப்பட்ட பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்டிருந்த 26,591 மாணவர்களில் 7,495 அதாவது 28 சதவீதம் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர் என அவதானிக்கப்பட்டது. இந்த எண்ணிக்கையில் 08 பாடநெறிகளில் மாணவர் விலகிச் செல்லும் சதவீதம் பதிவுசெய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் 50 சதவீதத்தை விட கூடுதலாக இருந்தன.

### 3.9.4 பரீட்சைப் பெறுபேறுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பரீட்சைப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சைப் பெறுபேறுகள் தொடர்பான தரவுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் நடைபெற்ற பரீட்சைகளுக்காக 18,895 மாணவர்கள் தோற்றியிருந்ததுடன் அதில் 10,327 மாணவர்கள் சித்தியடைந்திருந்தனர். அதன் பிரகாரம் 8,568 மாணவர்கள் அதாவது 45 சதவீதம் சித்தியடைந்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளில் கீழே காட்டப்பட்டுள்ள பாடநெறிகளில் 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரையில் பெறுபேறுகளை வழங்குவதற்கு திணைக்களத்தின் பரீட்சை பிரிவு தவறியிருந்தது. இதன் காரணமாக மாணவர்களுக்கு அவர்களின் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிக்கல்கள் தோன்றியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| கல்லூரியின் பெயர் | பாடநெறியின் பெயர் | வழங்கப்படாத பெறுபேறுகள் |
|---|---|---|
| மட்டக்களப்பு | NCT சிவில் பொறியியல் | முதலாவது காலாண்டு |
| பதுளை, குருணாகல், ஹோமாகம, மட்டக்களப்பு, சம்மாந்துறை, | NCT சிவில் பொறியியல் | மூன்றாவது காலாண்டு |
| கண்டி, சம்மாந்துறை, | மின் பொறியியல் | மூன்றாவது காலாண்டு |
| குருணாகல், அம்பிலிபிட்டிய | அளவுக் கணிப்பீடு | முதலாவது காலாண்டு |
| ஹோமாகம, கம்பஹா, களுத்துறை, கண்டி, மட்டக்களப்பு அநுராதபுரம், அம்பிலிபிட்டிய, வரகாகெபால, வவுனியா | அளவுக் கணிப்பீடு | இரண்டாவது காலாண்டு |
| மருதானை, ஹோமாகம, கம்பஹா, யாழ்ப்பாணம், சம்மாந்துறை, அம்பிலிட்டிய மற்றும் கண்டி | அளவுக் கணிப்பீடு | மூன்றாவது காலாண்டு |

(இ) சிவில், மின்சாரம் மற்றும் தொழில்நுட்ப பொறியியல், அளவீட்டுக் கணிப்பீடு, நிர்மாணம், தொலைத்தொடர்பு, மோட்டார் வண்டி தொழில்நுட்பம் மற்றும் தேசிய சான்றிதழ் பாடநெறிகளுக்கு சமமான மற்றும் இறுதி பரீட்சைகளுக்காக தோற்றிய மாணவர்கள் 1,865 மாணவர்களில் ஒருவரேனும் அப்பரீட்சைகளில் சித்தியடையவில்லை. ஆங்கில மொழி மூலமாக பரீட்சை நடாத்துவது பிரதான காரணமாக இருந்தது.

(ஈ) 101 மாணவர்கள் தோற்றிய 09 பாடநெறிகளின் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடல் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

மேற்குறித்த தகவல்களின் பிரகாரம் திணைக்களத்தின் பரீட்சை பெறுபேறுகள் வெளியிடல் மற்றும் மாணவர் சித்தியடையும் போக்கு பலீனமான மட்டத்தில் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 3.10 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்

2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக் கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங் களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1313 | 612 | 702 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 144 | 39 | 105 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,272 | 844 | 430 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 1,167 | 944 | 245 | 22 |
| | **மொத்தம்** | **3,896** | **2,439** | **1,482** | **25** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் இலங்கை தொழில்நுட்ப கல்வி சேவையின் 05 பணிப்பாளர்களில் 04 பேரும் 09 தொழில்நுட்ப கல்லூரிகளில் 18 பணிப்பாளர் மற்றும் மேலதிக பணிப்பாளர்களில் 12 பேருக்கும் தொழில்நுட்ப கல்லூரிகளில் 30 அதிபர்களில் 23 பேருக்கும் 30 உதவி அதிபர் பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்டன. தொழிநுட்ப/ தொழில்நுட்பவியல் கல்லூரிகளில் 214 விரிவுரையாளர்களுக்கும். 274 மதியுரையாளர்களுக்கும் 22 தொழில்துறை மதியுரையாளர்களும் சட்ட உத்தியோகத்தரும் 39 பதிவாளர்களில் 20 பேரும் அவ்வெற்றிடங்களுக்கு இடையே காணப்பட்டனர்.

(ஆ) மிகை பதவியணியிரின் எண்ணிக்கை 25 ஆக இருந்ததுடன் அதில் பிரதி பணிப்பாளர் (திட்டமிடல்) பதவியை உரித்துடைய உத்தியோகத்தர் 2015 ஜனவரி 05 திகதி முதல் 05 வருட காலத்திற்கு வெளிநாட்டுக்குச் சென்றிருந்தமையால் அப் பதவிக்கு வேறு ஒரு பெண் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்ததுடன், 24 மிகை பதவியணியினர் அங்கீகாரம் பெற்றப்படாத பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்டிருந்தனர்.

(இ) தலைமை அலுவலகத்தில் 16 பிரதி பணிப்பாளர் பதவிகள் வெற்றிடங்களாக இருந்ததுடன், அப்பதவிகளில் பதில் கடமை புரிவதற்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக நிரந்தர நியமனம் வழங்குவதில் தாமதம் காணப்பட்டது. நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்காக நிரந்தர நியமனம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், வேறு திணைக்களத்தின் உத்தியோகத்தர் ஒருவர் பதில் கடமை புரிவதற்கு நியமனம் வழங்கப்பட்டிருந்தது. தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவிகளுக்காக நிரந்தர நியமனம் வழங்காமல் ஒப்பந்த அடிப்படையில் ஓய்வு பெற்ற உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(ஈ) தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகங்களில் வெளிவாரி மதியுரைகளுக்காக மீளாய்வாண்டில் ரூபா 305.92 மில்லியனான வெளிவாரி மதியுரை படிகளாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. அவ் விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்பு செய்தல் கல்லூரி அடிப்படையில் இடம்பெறுவதுடன் அவர்கள் விரிவுரைகளை நடாத்தும் போது காணப்படும் வினைத்திறமை மற்றும் ஆக்கவளம் தொடர்பாக மதிப்பீடொன்று தலைமை அலுவலகத்தின் மூலம் போதியளவில் இடம்பெறாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் சில கல்லூரிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டிருந்த வெளிவாரி விரிவுரையாளர்களின் தகைமைகளுக்குரிய சான்றிதழ்களின் பிரதிகள் உண்மையானதென உறுதிப்படுத்தியிருக்கவில்லை.

(உ) தாபனவிதிக் கோவையின் மூன்றாம் அத்தியாயத்தின் 3:8:2 ஆம் பிரிவு மற்றும் திணைக்களத்தின் இடமாற்ற கொள்கையின் பிரகாரம் ஒவ்வொரு தரத்திலுள்ள சேவையிடங்களில் சேவை செய்ய வேண்டிய உச்ச காலப் பகுதியின் படி இடமாற்றம் வழங்கப்பட வேண்டும். எனினும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 10 ஆண்டுகளுக்கு மேலான சேவைக்காலத்தை விஞ்சிய 29 கல்விசார் பதவியணியினர் மற்றும் 42 கல்விசாரா பதவியணியினர் ஆக இருந்தனர்.

மேலே குறிப்பிட்ட பதவியணியில் 09 தொழில்நுட்ப கலலூரிகளில் அதாவது ஒரே சேவை நிலையத்தில் 20 வருடங்களுக்கு மேற்பட்ட கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியினர் 14 ஆக இருந்தனர்.